25-7-2018
ஓ எஸ் 260/2015
பி.வா.சா.1 ரமேஷ்குமார்
பி.வா.சா. 1 சத்திய பிரமாணம்செய்விக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

நான் பி. இ வரை படித்திருக்கிறேன். நான் அசல் வழக்கில் 254/16 ஐ தாக்கல் செயது இந்த வழக்குடன் சேர்த்து நடத்துகிறேன். இநத வழக்கில் இல்லாத வேறு சொர்துக்களும் உள்ளத அதன் விவரங்களும் எனக்கு தெரியும். என் அப்பாவின் சகோதரிக்ள் 3 பேர் அவர்களை தெரியும்., இந்த வழக்கில் என் அத்தைகளுக்கு பாகம் இருக்கும் விவரம்தெரியுமா என்றால் தெரியும். என் தகப்பனாரும் அவருடைய சகோதரிகளும் பாகம் செய்து கொண்டார்கள். அந்த பாகப்பிரிவினை பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. என் அப்பாவும் அவருடைய சகோதரிகளும் பிரித்து கொண்டது போக மீ தி ஒரு ஏக்கர் 43 சென்ட் நிலம் இந்த வழக்கில் சொத்து விவரங்கள் காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஒருஏக்கர் 43 சென்ட் எங்கு இருக்கிறது என்ற விவரம் தெரியும் அதன் செக்குபந்தி விவரம் 3 எல்லைகள் தெரியும். மேற்படி சொத்து ஐ வார்டு பிளாக் 16 டி எஸ் நெ. 6,ல் 15 உட்பிரிவுகளும், டி எஸ் 7 ல் 10 உட்பிரிவுகளும் உள்ளது. மேற்படி1 ஏக்கர் 43 சென்ட் ஐ- வார்டிலும் பிளாக் நெ. 14 டி எஸ் நெ 7/9, 7/10 ல் உள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. மேற்படி விவரம் சரியானதா என்ற விவரம் என்னால் சொல்ல இயலாது. என்னுடைய வழக்கான 254/16 சொத்துக்கான வருவாய் துறைஆவணம் எதையும் தாக்கல் செய்யவிலலை என்றால் சரிதான்., பெருமாள் கவுண்டரை நான் பார்த்ததில்லை . பழனியம்மாளையும் பார்த்ததில்லை. கோவிந்தகவுண்டரையும் எனக்கு தெரியாது. 1905 ல் ஏற்பட்ட ஆவணம் குறித்து நேரடியாக தெரியாது., ஓ எஸ் 254/16 ல் சொல்லப்பட்டுள்ள சொர்துதக்களுக்கான தற்போதைய சர்வே நெம்பர் மற்றும் வருவாய் துறை ஆவணங்களில் கண்டுள்ள டி எஸ் நெ. ஆகியவற்றை பொறுத்து என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குறித்த விவரங்கள் எனக்கு தெரி=யாது என்றால் சரியல்ல டி எஸ் நெம் பர் மட்டும் தெரியும். ஆனால 1 ,2,3,5 அயிட்டத்திற்கான டி எஸ் நெம்பர் தெரியாது., 1,2,3,5 அயிட்டங்கள் ஒரே இடத்தில் இருந்ததா என்றால் ஆம் ஒரே இடமத்தில் இணைந்தார்போல் உள்ளது- மேற்படி அயிட்டங்கள என் சுவாதீனத்தில் இல்லை. மேற்படி அயிட்டங்களுக்கான செக்குபந்தி தனித்தனியாக தெரியாது. மேற்படி 5 அயிட்டத்திற்கும் விஸ்தீரணம் 10 ஏக்கர் 84 சென்ட் ஆகும். அதிரல 7 ஏக்கர் 97 சென்ட் நிலத்திற்கு ஓ எஸ் 254/16 வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். என்னுடைய வழக்கில் குறிப்பிட்டுள்ள 4 அயிட்ட சொத்துக்களின் பழைய சர்வே எண்ணுக்குரிய இணையான தற்போதைய வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. பழைய எண்ணிற்கு தற்போதைய வருவாய் துறை ஆவணங்களில் கண்டுள்ள சர்வே எண்களை பொறுத்து என்னால் சொல்லஇயலாது. நான் சொன்ன 7 ஏக்கர் 97 சென்ட் தறபோது சுமாட்ர 20 பேரிடம் உள்ளது. அந்த 20 பேரையும் என்னுடைய வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. 20 பேரையும்எனக்கு தெரியும்.அவர்களிடமுள்ள நிலத்தை வாங்கினால்தான் எனக்கு பாகப்பிரிவனை கொடுக்க முடியும்., அந்த 20 பேருக்கும் சொர்துது எ்வ்வாறு பாத்தியப்பட்டது அவர்களுடைய முன் கிரைய தாரர்கள் யார் யார் அவர்களின் உரிமை மூல ஆவணங்கள் என்ன என்பது தெரியுமா என்றால் தெரியும் அவர்களுடைய கிரையதார்ர்களை என்னுடைய வழக்கில் தரப்பினர்களாக சேர்த்திருக்கிறேன். 1935 ம் வருடத்திய பத்திரத்தை நான் என்னுடையவழக்கில் தாக்கல செய்யவில்லை., தேவைப்பட்டால் தாக்கல் செய்யதயாராக இருக்கிறேன்., 1935 ம் ஆண்டு பத்திரத்தில்தான் நிலத்தை யார் யார் பிரித்துக்கொண்டார்கள் என்ற விவரம் தெரியும். 1935 ல் யார் யார் பிரித்துகொண்டார்கள் என்றால் அய்யனார் கவுண்டர் அப்பாவு க்வுண்டர் மகன்கள் 5 பேரில் பெருமாள் கவுண்டர் , ஆறுமுகம், கோவிந்தர் ஆகியோர் பிரித்து கொண்டார்கள். பெருமாள் கவுண்டர் எனக்கு முப்பாட்டனார் என்பதற்கு ஆதாரமாக ஆவணங்கள் எதுவும்இல்லை., பெருமாள் கவுண்டருக்கு யார் யார் வாரிசுகள் என்று

காட் ட வாரசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. ராமசாமி கவுணடரின் வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை தேவைப்பட்டால் தாக்கட்ல செயகிறேன். இந்த வழக்கில் உள்ள சொ்த்து மட்டும் தான் எங்கள் அனுபவத்தில் உள்ளது.பிளாக் 16, பிளாக் 14 என்பது வெவ்வேறுதான்., ஆனால் நிலம் ஒன்றே. எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் 43 சென்ட்தான் உள்ளது என்றும் அதைத்தான் நாங்கள் பிரித்துக்கொள்ளவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் வேண்டுமென்றே 100 வருடத்திற்கு முந்திய ஆவணங்களைகொண்டு எங்கள் குடும்பத்திற்கு சம்மந்தமில்லாத அந்த ஆவணங்களில் கண்டுள்ள சொ்த்துக்களின் பேரில் உரமைகோரி தவறான வழக்கை நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல., மேற்படிஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் எங்கள் குடும்பத்தாருக்கு பாத்தியப்பட்ட சொ்த்து என்பதை காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

Sd/-
III Additional District Judge,
Salem.

25-7-2018
O S 171/2016
வா.சா. 1 பழனிசாமி
வா-சா. 1 சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

கு.வி.

நான் பஜாஜ் கேபிடல் கம்பெனியில் மேனேஜராக 14 வருடங்களாக பணிபுரிகிறேன். மாதம் ரூ 60 ஆயிரம் சம்பளம் பெறுகிறேன். அதற்கான வருமான வரி கணக்கு தாக்கல் செய்கிறேன். இன்கம் டாக்ஸ் ரிட்டன் தாக்கல் செய்யவில்லை. வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செய்திருக்கிறேன். நான் வங்கி கணக்கு பட்டியலை தாக்கல் செயயவில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியை எனக்கு 10 வருடமாக தெரியும முரளிதரனின் நண்பர் கண்ணன் என்பவரை 20 வருடமாக தெரியும் கண்ணன் மூலமாக எனக்கு பிரதிவாதியை தெரியும பிரதிவாதியை எனக்கு 10 வருடமாக தெரியாது என்றும் அவரை நான் பார்த்ததேஇல்லை என்றும் சொன்னால் சரியல்ல. தொகையை ரொக்கமாக கொடுத்திரா அல்லது காசோலை யாக கொடுத்திரூா என்றால் தொகையாக கொடுத்தேன். அப்போது யார் யார் இருந்தார்கள் என்றால் கண்ணன், பாலாஜி ஆகியோர்கள் இருந்தார்கள். எத்தணை சாட்சி கண்ணணை யார் அழைத்து வந்தார்கள் என்றால் கண்ணன், பாலாஜிமுரளி ஆகியோர்கள் வந்தாட்ரகள். முரளிதான் அவர்களை அழைத்து வந்தார். முரளிதரன் ஜவ்வரி வியாாபரம் செய்கிறார். 12 லட்சம்ரொக்கமாககொடுக்கும்போது காசோலையாக கொடுக்க தோன்றவில்லையா என்றாபல் அவர தொகையாக கேட்டதால் தொகையாக கொடுத்தேன். வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தேன். வங்கியிலிருந்து எடுத்துகொடுத்தற்கான ஆவணம் தாக்கல்செய்தீரா எனற்ால் தேவைப்பட்டால் கொடுக்கிறேன். கண்ணன் சாட்சி கையெழுத்து பேட்டுள்ளார். பாலாஜிபுரோ நோட்டை எழுதினார்., பாலாஜி எனக்கு உறவினர் அல்ல. புரோ நோட் பார்ம்ஐ முரளிதர்ன் வாஙகி வந்தார். புரோநோட்டிற்கான ட்ஸடாம்பு முரளிதரனே எடுத்து வந்தார். புரோ நோட்டில் யார் முதலில் கையெழுத்தும் அதற்கு கீழாக ஒரு கையெழுத்தும் மற்றும் இரண்டு கைரேயையும் போட்டுள்ளார். பிரதிவாதியும்நானும் 10 வருடங்களாக எத்தனைமுறை கொடுக்கல் வாங்கல் கொடுக்கப்பட்டது என்றால் அவ்வாறு எதுவும் இல்லை இந்த கடன் தான் முதன்முறையாக முரளிதரனுக்கு கொடுத்தேன். சாட்சி பின்னிட்டு முரளிதரனுக்கு ஒரு முறையும கண்ணணுக்கு ஒருமுறையு.மஏற்கனவே கடன் கொடுத்ததாக கூறுகிறார். கண்ணன் லாரி டிரர்ன்ஸபோர்ட் புக்கிங் ஏஜென்டாக பணிபுரிகிறார். அவர் லேவாதேவி தொழில் செய்கிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது., நானும் கணண்ணும் 3 முறை பிரதிவாதியிடம் கடன் தொகையை திரும்ப செலுத்தும்படி கேட்டோம். கடன் கொடுத்து 6 மாதம் கழித்து கேட்டோம். சட்டபூர்வமாக அறிவிப்பு ஒன்றை அனுப்பினேன். அந்த அறிவிப்பு நீதிமன்றததில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் அனுப்பினேன். சாட்சி பின்னிட்டு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்று கூறுகிறார். 12 லட்சம் பிரதிவாதிக்கு எதை நம்பி கொடுத்தேன் எனறால் நம்பிக்கையின் பேரில்கொடுத்தேன். இவ்வழக்கு தாக்கல் செய்யும்போது பிரதிவாதி சொத்தின்பேரில் ஜப்தி கோரி மனுதாக்கல் செய்திருந்தேன். மேலும் பிரதிவாதியை நொடித்தவராக அறிவிக்க கோரி ஐபி மனு தாக்கல் செய்திருக்கிறேன். ஐ பி எந்த தேதியில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் 16-4-2016 ல் தாக்கல் செய்தேன். இந்த மனுவை வா.சா.ஆ 2 ஆக இந்த வழக்கில் தாக்கல் செய்திருக்கிறேன். புரோ நோட்டை கருப்பு மையினால் எழுதப்பட்டது. கண்ணன் எந்த நிற மையினால் கையெழு்துது போட்டார் என்றால் நான்கு வருடம் ஆகியதால் ஞாபத்தல் இல்லை. பாலாஜிகருப்பு நிற மையினால் கையெழுத்து போட்டார்., முரளி புளூ இங்க்னால் கையெழுத்து போட்டார். புரோ நோட்டில் உள்ளகைரேகை சரியாக விழாமல் உள்ளது என்றால் அழுத்தமாக இல்லை. சார் பதிவாளர் அலுவலகத்தில் தடங்கல் மனு கொடுத்தேன். பதிவாளர் நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு வரவில்லை என்று கூறினார். அதனால் பதிவு செய்திருப்பதாக கூறினார். அதனால் சென்னைக்கு லஞ்ச ஒழிப்பு துறைக்கு

ஒரு மனு செய்திருக்கிறேன். என்னுடைய மனுவின் பேரில் சார்பதிவாளர் பேரில் நடவடிக்கை எடுத்தார்களாக என்றால் அது எனக்கு தெரியாது. தடங்கல் மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். தடங்கல் மனுவில் நான் தாவா புரோ நோட்டின் விவரததை சொல்லியிருக்கிறேன். புரோ நோட்டை எழுதிய பாலாஜி எனக்கு நண்பர் அல்ல. முரளிதான் அழைத்து வந்தார். பிரதிவாதிக்கு நான் யார் என்றே தெரியாது என்றும் என் நண்பர் கண்ணணிடம் ரூ 50 ஆயிரம் கடனாக பெற்றுக்கொண்டுஒரு புரோ நோட் எழுதி கொடுத்தார் என்றும் அந்த கடனை தீர்த்து விட்டார் என்றும் சொன்னால் சரியல்ல., அந்த புரோ நோட்டை கண்ணன் திருப்பி தர்வில்லையென்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி கண்ணணிடம் அந்த புரோ நோட்டை திரும்ப கொடுக்கும்படி கேட்டபோது கண்ணன் தொலைந்து விட்டதாக சொன்னார் என்று சொன்னால் சரியல்ல., கண்ணனும் நானும் 20 வருட நண்பர்கள் என்பதால் அந்த புரோ நோட்டை என்னிடம் கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அந்த புரோட்டை கொண்டு நான் 12 1/2 லட்சத்திற்கு பூர்த்தி செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி முதன் முதலில் என்னை நீதிமன்றத்தில்தான் பார்த்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு தொகை எதுவும்கொடுக்கவில்ல எனறும் பிரதிவாதி எனக்கு புரோ நோட் எழுதிகொடுக்கவில்லையென்றும் பொய்யாக புரோ நோட் தயாரித்து இவ்வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-
III Additional District Judge,
Salem.